# நாவன்மை மிக்க நக்கீரர்களை உருவாக்கும் முயற்சியில் உதயநிதி ஸ்டாலின்!...

**வே**ட்ப மொழிவதாம் சொல் என்று சொல்லுவார் வள்ளுவர் பெருந்தகை. வெல்லுகிற சொல்லைப் பேச வேண்டும்; அதுவும் கேட்போர் இதயத்தை ஈர்க்கிற இணைக்கிற வகையில் உரை நிகழ்த்த வேண்டும் என்று பொய்யா மொழிப்புலவர் சொல்லுவதை நிலைநாட்டும் விதத்தில் இளைஞர்களைக் கழகத்தின் சொற்பொழிவாளர்களாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார் உதயநிதி ஸ்டாலின்.

ஓர் இயக்கம் அல்லது அமைப்பு வெற்றி பெற வேண்டும் என்றால், எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் மிக அவசியம் என்பதைச் சீனப் பேரறிஞர் மாவோ என்ற மா சே துங் சொல்லியிருக்கிறார்.

சமுதாயத்தின் மூலை முடுக்கெல்லாம் எழுத்துகள் போய் சேர்வதைக் காட்டிலும், சொற்பொழிவாளர்களின் பேச்சுகள் போய் சேர்ந்து விடுகின்றன. கல்வி அறிவு உள்ளவன் தான் செய்தி தரும் எழுத்துக்களைப் படிக்க முடியும். ஆனால், கேட்கும் திறனுடைய செவிப்புலன் மிக்க சாதாரணமான ஒவ்வொரு மனிதனும் உலக நடப்பைக் கேட்டு அறிய முடியும். ஆகவே, சொற்போர் என்பது ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்த அமைவதற்கான மிகப்பெரிய கூர்மையான ஆயுதமாகும்.

கிரேக்கம்தான் முதன் முதலில் பொதுமக்கள் கூட்டம் போட்டு சொற்பொழிவாளர்கள் பேச வைத்தது என சரிதம் எழுதுகிறது என்றாலும், அதற்கு முன்னரே சங்க காலத்தில் தமிழகத்தில் பாங்கறிந்து ஏறும் பட்டிமன்றம், அரசவையில் வாதிடும் புலவர், அறிஞர் பெருமக்கள் புரிந்த சொற்போர், உத்திரமேரு கல்வெட்டுகள் போன்றவை தருகிற செய்திப்படி, தேர்தல் காலத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் ஊர்க்கூட்டம் போட்டு வாக்கு கேட்கும் முறையும், அவை பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்ட வரலாறும் நமக்கு உறுதிப்படுத்துகின்றன.

"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம் யாநலத்து உள்ளதூம் அன்று," என்று முதலில் தொடங்கிச் "சொல்வன்மை" தலைப்பில் ஓர் அதிகாரமே படைத்த வள்ளுவர், அதில் பேச்சாளர்க்குரிய கொள்கையாகப் பத்து குறட்பாக்களில் சொல்லியிருக்கிறார். மற்றொரு அதிகாரத்தில் "...அரங்கின்றி வட்டாடியற்றே." என்று பேசத் தெரியாத ஒருவனுடைய திறமையின்மையை ஒப்பிட்டுக் "கல்லாமை" என்னும் அதிகாரத்தில் சொல்லியுள்ளார். ஆகவே, சங்க காலத்திலேயே சொல்லாடல் எப்படி அமைய வேண்டும் என்றும், சொற்போர் களத்தில் எப்படி வாதாட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஓர் இயக்கம் ஓங்கி, தாங்கி வளரச் சொல்லாடல், சொல்லாட்சி மிக்க சொற்பொழிவாளர்கள் மிக மிகத் தேவை.

பொதுவாக ஒரு பேச்சாளர்க்கு வேண்டிய நோக்கங்களாக ஐந்து கொள்கைகள் கொண்டமைய வேண்டுமெனப் பேச்சுக் கலையைப் பற்றி அறிஞர்கள் கூறுவர். அவை பேச்சாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய அடிப்படைத் தகுதிகளாகும். 1.மக்கள் தொடர்பு (Communication), 2. பேச்சாளர் தரும் தகவல் (Message), 3.வேட்ப மொழியும் மொழி நடை (Medium), 4. எவ்வகையான, எத்தகையான கேட்போர் (Audience), 5. சொற்பொழிவின் விளைவு (Effect). என்பவையே கருத்தில் கொள்ள வேண்டிய கருவிகள் ஆகும்.

பேரறிஞர் அண்ணாவின் படை வரிசையில் போர்க்களச் சிப்பாய்களாக நின்றவர்கள் கலைஞர், பேராசிரியர், நாவலர் நெடுஞ்செழியன் போன்ற பல சொற்போர்க் கள வீரர்களை உருவாக்கி உலைக் கலனாகத் திகழ்ந்தவர். பெரியார் தத்துவங்களைத் தூக்கிச் சுமந்து பட்டி, தொட்டிகள் எங்கும் பரப்புரை செய்த அண்ணாவைப் போல் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாணவர் இளைஞர் பட்டாளத்தை உருவாக்கிக் காட்டியவர். அந்தக் கொள்கைத் திசையில் தளபதி மு.க. ஸ்டாலின் நின்று வெற்றி கண்டவர். அதனால் தான் கழகம் இன்றைக்குத் தலை நிமிர்ந்து நிற்கிறது. எந்தக் கொம்பனாலும் என்றும், எவராலும் வரலாற்றில் வீழ்த்த முடியாத அழிக்க முடியாத நம் கழகம்; இமய மலையாக நிமிர்ந்து நிற்கிறது! அந்தப் பணியைக் கலைஞருக்குப் பிறகு தளபதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார்; வருகிறார்! அவரைத் தொடர்ந்து மேலும் உதயநிதி ஸ்டாலின், இன்று தலையாளங் கானத்துச் செருவென்ற பாண்டியனாகத் தோன்றி வீர நடை போட்டு வருகிறார்.

கவிஞர்
**தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



அண்ணா கண்ட பேரியக்கத்தில் அவர் வழி நின்று, நாவன்மை மிக்க பல நக்கீரர்களை உருவாக்கிட இளைஞர் அணியின் வாயிலாகச் சொற்போர்க் களங்களை உருவாக்கி வருகிறார். மிக இலட்சிய அக்கறையோடு, தமிழ்ச் சமுதாயம் என்றும் தழைத்து, கிளைத்து நிற்க வேண்டும் என எண்ணித் திண்ணியராக விளங்குகிறார்! திராவிட இயக்கச் சொற்போர்க் களத்தில், இளைய காளையர்களாகிய பல வீரர்வீராங்கனைகளை இறக்கிடவும், அவர்களைத் தேர்வு செய்யத் தகுந்த பழுத்த அறிவார்ந்த பல நடுவர்கள் துணையோடும்; கழக மூத்த முன்னோடிகள், நிர்வாகிகள் அரவணைப்போடும்; தேடுதல் முயற்சிகளோடு ஈடுபட்டு வருகிறார்கள். பேச்சுப் பயிற்சியில் கலந்து கொள்ளும் வீரர்களான சொற்பொழிவு இளம் காளைகளைக் கண்டுபிடிக்க தமது செயல்பாடுகளை முன்னிறுத்தியுள்ளார் நம் ஈடு இணையற்ற இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின்! வருங்கால இளைய சொற்பொழிவாளர்களின் திறமை கண்டு செதுக்குவதோடு, அவர்கள் எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் கொள்கை முழக்கம் செய்திடவும், திராவிட இயக்கக் கோட்பாடுகளை குன்றேற்றி விளக்கம் புரிந்திடவும்; அதற்கான தகுந்த வீரர்களென உருவாக்கிடவும்; உரம் மிகுந்த நெஞ்சங்களை ஊக்குவிக்கும் வகையில், திராவிட இயக்கச் சித்தாந்தக் கொள்கைப் பணியில் அளப்பரிய அர்ப்பணிப்புக் கடமை உணர்வோடு செயல்பட்டு வருகிறார்.

புறநானூறு, கலிங்கத்துப்பரணி வீரர்கள் போல் வீர, தீர நடை போடக் கழகச் செயல்பாட்டில்; தன்னைப் பெரிதும் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார் நம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!

கழக இளைஞர் அணிச்செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மக்கள் செல்வாக்கு மிக்க சொற்பொழிவாளராக இருந்து வரும் அதே நேரத்தில் பல சொற்பொழிவாளர்களைக் கழகத்திற்கு உருவாக்குவதில் முன்னணி களவீரராக நின்று கொண்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்ப்பதற்கும், அதன் கொள்கைகளை எடுத்துச் சொல்வதற்கும் அண்ணா கலைஞர் வழியில் நின்று கடமையாற்றிப் பரப்புரை நிகழ்த்தி வந்த முன்னணி தோழர்கள் பலரும் உண்டு. அவர்களின் கடும் பிரச்சாரத்தினால் கழகம் எனும் இந்த இயக்கம் இந்திய நாட்டில் தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழ் மொழி, தமிழ் இனம் வாழத் தங்களை ஒப்படைத்துக் கொண்ட மாபெரும் கள வீரர்கள் அவர்கள். ஆட்சியின் அநீதி, அத்துமீறல், பொய் வழக்குகள், சிறைச்சாலைகள், சர்வாதிகார ஆட்சியின் அதிகாரத்தை; இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட தோழர்கள் ஆவார்கள்.

அப்படிக் கடந்த காலத்தில் கழகச் சொற்பொழிவாளர்களாக இருந்து செயல்பட்ட துரைமுருகன், அ.இரகுமான்கான், பொன். முத்துராமலிங்கம், வை.கோபால்சாமி, க. சுப்பு, கா,காளிமுத்து, கவிஞர் நா. காமராசன், விருதுநகர் சீனிவாசன் ஆலடி அருணா, எஸ்.பி. சற்குணம், என்.வி. என். சோமு, வெற்றிகொண்டான், புலவர் ஆடலரசு, கோவை மு. இராமநாதன், நன்னிலம் நடராசன், நெல்லை நெடுமாறன், நெல்லை புகாரி, கோவை மணியன், தீப்பொறி ஆறுமுகம், திருச்சி சிவா, பரிதி. இளம்வழுதி, ஆ. ராஜா, கவிஞர் தமிழ்தாசன், தன்மானம் தமிழ் மன்னன், வண்ணை தேவகி, வண்ணை ஸ்டெல்லா, நூர்ஜகான் பேகம், தஞ்சை கூத்தரசன், தமிழ்மன்னன், கவிதைப் பித்தன், தமிழன் பிரசன்னா, புதுக்கோட்டை தமிழரசி, சக்தி கோதண்டம், புதுக்கோட்டை விஜயா, சேலம் சுஜாதா உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட சொற்பொழிவாளர்கள் கழகத்தின் மீது நாட்டம் கொண்டு தொண்டுள்ளம் படைத்தவர்களாக நின்று, கொள்கையை வளர்க்கவும், கழகக் கொடியைக் காக்கவும் தொடர்ந்த வண்ணமாய் இருக்கிறார்கள். பாடல், இசைக் கச்சேரி போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலம் கழகத்தை வளர்த்தவர்கள் வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் பலர். இன்ன பிற ஆயிரக்கணக்கான தோழர்கள் கழகம் காத்த முன்னோடிகள் ஆவர். இந்த இயக்கத்தை வளர்க்கப் பட்டித் தொட்டிகள் எல்லாம் சென்று சொற்பொழிவு ஆற்றிக் கடமையாற்றி வந்தவர்கள். அதனால் தான் நமது பேரியக்கம் செம்மாந்து நிற்கிறது.



கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் நூறாண்டை முன்னிட்டுத் தலைமைக் கழகத்திற்கு 100 இளம் சொற்பொழிவாளர்களைத் தேர்வு செய்து தருமாறு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணியை அறிவுறுத்தியிருந்தார்கள். அவரின் சீரிய, சிறப்புமிகு அந்த அறிவுரையிக் கிணங்க, தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரும், இளைஞர் அணிச் செயலாளருமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெரும் முயற்சி எடுத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தார். "என் உயிரினும் மேலான....." எனும் தலைப்பில் பேச்சுப் போட்டி அறிவிக்கப்பட்டிருந்தது. அத் தலைப்பை ஏற்றுப் போட்டியில் கலந்து கொண்டு பேசுவதற்காகத் தமிழ்நாடு முழுவதும் 17,000 க்கு மேற்பட்ட விண்ணப்பத்தாரர்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர். தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒருங்கிணைப்பில் இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாட்டில் பிரிக்கப்படாத பழைய ஒருங்கிணைந்த 16 மாவட்டங்களில், கடந்த ஆகஸ்ட் 17 மற்றும் 18 ஆகிய நாள்களில் மாவட்ட வாரியான முதற்கட்டப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

கடந்த ஆகஸ்ட் 17, 18, 24, 25ஆகிய தேதி தமிழ்நாடு முழுவதும் இளம் பேச்சாளர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் நடைபெற்றது. சென்னை உள்ளிட்ட 36 ஒருங்கிணைந்த மாவட்டங்களில் பேச்சாளர்களை தேர்வு செய்யும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் சென்னை மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய சென்னை தெற்குப் பகுதியில் நடந்த சொற்பொழிவாளர் தேர்வு கூட்டத்தில் நானும் (கவிஞர் தமிழ்தாசன்) டி.கே.எஸ் இளங்கோவன், பொள்ளாச்சி சித்திக் ஆகியோர் நடுவர்களாக பங்கேற்று தேர்வு செய்யும் முறையைப் பின்பற்றினோம். காலை ஒன்பது மணி அளவில் தொடங்கிய பெருமைமிகு இந்நிகழ்ச்சியானது இரவு 7 மணி வரை தொடர்ந்தது. இவர்கள் போன்ற கழக சொற்பொழிவாளர்கள் உருவாக்குவதற்கு தலைவர் தளபதி ஆணையிட்டதிற்கு இணங்க அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியின் பயனாக தமிழ்நாடு எங்கும் சொற்பொழிவாளர்கள் கூட்டம் தேர்வு நடைபெற்று வந்தன. சென்னை தெற்கு மாவட்டத்தில் நடுவராக இருந்த நான் மிகவும் பூரித்துப் போனேன்.

கேட்போர் உள்ளத்தை அழகாகப் பதிவு செய்யும் விதத்திலும், நாம் பேசுவதைப் பிறர் எளிதாக புரிந்து கொள்ளத் தக்க வகையிலும், நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லும் விதத்திலும் இளம் சொற்பொழிவாளர்கள் தாங்கள் எடுத்து கையாண்ட பேச்சு முறையானது இதயத்தைக் கொள்ளை கொண்டது. கருத்து வெளிப்படுத்துகிற முறை உச்சரிப்பு, நினைவாற்றல் பயனற்ற சொற்களைப் பேசாமல் பயன் தரும் சொற்களைப் பயன்படுத்துவது, சிறுகதை, கற்பனை கண்ணோட்டத்துடன் கவிதைகள், உவமைகள், உருவங்கள் இணைத்துப் பேசக்கூடிய ஆற்றல்மிகு தோழர்கள் அதிலே கலந்து கொண்டார்கள். அதிலும் ஆர்வமிக்க முறையில் மாணவர்கள் பெரும்பாலான அளவில் பெண்கள் திரண்டு வந்து கலந்து கொண்ட செய்தியானது கண்டு மிகவும் வியப்பாக இருந்தது; சிறப்பாகவும் இருந்தது.

மாணவர்கள் மாணவியர் பெரியார், அண்ணா, கலைஞர் அவருடைய கொள்கைகள் திட்டங்கள் வழிகாட்டும் நெறிமுறைகள் தொலைநோக்குப் பார்வைகள் அனைத்தையும் பட்டியலிட்டு மிகவும் சிறப்பாக பேசியது நம் மனத்தை கொள்ளை கொண்டது இப்படிப்பட்ட சொற்பொழிவுகளை அடிக்கடி ஏற்படுத்தி கழகத்திற்கு களவீரர்களில் உருவாக்க வேண்டும் என்பது எனது பேரவா! ஆசையும் கூட! இதைக் கடந்த காலத்தில் அண்ணா, கலைஞர், தளபதி போன்றவர்கள் செய்து வந்தனர் என்பதை நிரூபிக்கத் தக்க வகையில், தற்போது இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி மு க ஸ்டாலின் அவர்கள் செய்து முடித்திருக்கிறார் என்பது மிகவும் பெருமைத்தக்க ஒன்றாகும்

சென்னை தெற்கு மாவட்டத்தில் நடைபெற்ற (கோல்டன் பாரடைஸ் திருமண மண்டபத்தில் 80 அடி சாலை) சென்னை 93 ல் அமைந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள 311 பேர் விண்ணப்பம் தந்திருந்தார்கள். அதில் 280 பேர் மேடையில் பேசினார்கள். தேர்வு செய்யப்பட்ட 14 பேருக்கு ரூபாய் 10 ஆயிரம் விதம் வழங்கப்பட்டது. பெண்கள் பெரும்பாலானவர்கள்மிக உற்சாகமாகக் கலந்து கொண்டனர். அழகாகவும் சிறப்பாகவும் கருத்துக்கள் நிறைந்த சொற்பொழிவாகவும் நிகழ்த்திய அந்நிகழ்ச்சி என்றும் கண் முன் நிறைந்து நிற்பதுடன் நெஞ்சத்தில் பதியம் போட்டு இருக்கின்றன என்று சொல்வதில், சாலவும் பேருண்மைகள் பொதிந்திருக்கின்றன. நிகழ்ச்சியின் இறுதியில் ஏ.எம்.பி. பிரபாகரன் தெற்கு சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கிருஷ்ணன் போன்றவர்கள் கலந்து கொண்டு பெருமைப்படுத்தினார் சிறப்பு செய்தார்கள்.

நிகழ்ச்சிகளை முன்னின்று தொடங்கி நடத்திய மாநில இளைஞர் அணி இணைச் செயலாளர் எஸ் ஜோயல் அருமையாக ஏற்பாடு அமைய உதவினார். மேலும், மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள், கழக முன்னோடிகள் உடனிருந்து இளஞ் சொற்பொழிவாளர் கூட்டம் சிறப்புப் பெற உதவினர்.

கழகத்தின் எதிர்காலக் களப் பணிக்கான போர்வாள்களாகவும், கூரிய வேல்களாகவும் விளங்கிட, இளஞ் சொற்பொழிவாளர்களுக்கு என் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

## சென்னை வடக்கு மாவட்டம்

# பெரம்பூர் - இராயபுரம் - ஆர்.கே.நகர் தொகுதிகளில் வட்டங்கள் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள்

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு



முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் - இராயபுரம் - ஆர்.கே.நகர் தொகுதிகளில் வட்டங்கள் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் அந்தந்த வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

| நாள் | பகுதி | வட்டம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 02.09.2024 திங்கள்கிழமை | ஆர்.கே.நகர் மேற்கு | 47வதுவட்டம் மாலை: 5.00 மணி | சத்தியமூர்த்தி தெரு, கொருக்குப்பேட்டை |
| | | 41(அ)வட்டம் மாலை: 6.00 மணி | எஸ்.ஏ.எஸ் பார்ட்டி ஹால், மணலி சாலை |
| 03.09.2024 செவ்வாய்க்கிழமை | பெரம்பூர் வடக்கு | 34(அ)வட்டம் மாலை: 5.00 மணி | A.B.திருமண மாளிகை, மணலி நெடுஞ்சாலை,கொடுங்கையூர் |
| | | 37(அ)வட்டம் மாலை: 6.00 மணி | J.R.K. மஹால்மீனாம்பாள் சாலை கிருஷ்ணமூர்த்தி நகர் |
| 04.09.2024 புதன் கிழமை | ஆர்.கே.நகர் கிழக்கு | 39வதுவட்டம் மாலை: 5.00 மணி | எண்: 34, மீனவமக்கள் சமுதாய நலக்கூடம், கிராஸ் ரோடு |
| | | 39(அ)வட்டம் மாலை: 6.00 மணி | T.P.R. திருமண மண்டபம், பூண்டி தங்கம்மாள் தெரு, |
| 05.09.2024 வியாழன் கிழமை | ஆர்.கே.நகர் கிழக்கு | 40வதுவட்டம் மாலை: 5.00 மணி | எண்: 34, மீனவமக்கள் சமுதாய நலக்கூடம், கிராஸ் ரோடு, |
| | | 40(அ)வட்டம் மாலை: 6.00 மணி | எண் : 1184,69வது பிளாக்,வ.உ.சி. நகர்,தண்டையார்பேட்டை |
| 06.09.2024 வெள்ளிக்கிழமை | ஆர்.கே.நகர் மேற்கு | 38வதுவட்டம் மாலை: 5.00 மணி | ரெயின்போ மினி பார்ட்டி ஹால், முதல் தெரு, நேதாஜி நகர் |
| | | 38(அ)வட்டம் மாலை: 6.00 மணி | வியாபாரிகள் திருமண மாளிகை வினோபா நகர் |
| 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை | பெரம்பூர் தெற்கு | 45அ)வட்டம் காலை 9.00 மணி | ராம்ஸ் மஹால் ஸ்டீபன்சன் ரோடு வியாசர்பாடி |
| | | 46வதுவட்டம் காலை 10.00 மணி | G.D.மஹால், E.H.ரோடு, வியாசர்பாடி |
| | | 45வதுவட்டம் காலை: 11.00 மணி | பீலிகான் முனீஸ்வரர் ஆலய வளாகம், 1வது தெரு, B.V.காலனி |
| 09.09.2024 திங்கள்கிழமை | இராயபுரம் மேற்கு | 48வதுவட்டம் மாலை: 5.00 மணி | சங்கீதா பார்ட்டி ஹால் வண்ணாரப்பேட்டை |
| | | 52வதுவட்டம் மாலை: 6.00 மணி | பாரூக் மஹால் மீனாட்சியம்மன் பேட்டை |
| 10.09.2024 செவ்வாய்க்கிழமை | இராயபுரம் கிழக்கு | 49வது வட்டம் மாலை: 5.00 மணி | திப்பம்பட்டி நாடார் மாளிகை ஸ்ரீரங்கம்மாள்கோயில் தெரு |
| | | 50(அ) வட்டம் மாலை: 6.00 மணி | யோகா தியான மண்டபம் முனியப்பன் சந்து, பனைமரத்தொட்டி |
| 11.09.2024 புதன் கிழமை | பெரம்பூர் வடக்கு | 37வதுவட்டம் மாலை: 5.00 மணி | M.S.மஹால் கிழக்கு அவென்யூ, முல்லை நகர் |
| | | 34வதுவட்டம் மாலை: 6.00 மணி | A.B. திருமண மாளிகை மணலி நெடுஞ்சாலை, கொடுங்கையூர் |
| 12.09.2024 வியாழன் கிழமை | ஆர்.கே.நகர் கிழக்கு | 43வதுவட்டம் மாலை: 5.00 மணி | சமுதாய கூடம் கும்மாளம்மன் கோயில் தெரு |
| | | 42(அ)வட்டம் மாலை: 6.00 மணி | லதா பார்ட்டி ஹால், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, |
| 13.09.2024 வெள்ளிக்கிழமை | இராயபுரம் மேற்கு | 53(அ) வட்டம் மாலை: 5.00 மணி | காட்பாடா மெயின் ரோடு மூலக்கொத்தளம் |
| | | 52(அ) வட்டம் மாலை: 6.00 மணி | சஃபிமண்டபம், அஜீஸ் முஹம்மது தெரு |
| 14.09.2024 சனிக்கிழமை | இராயபுரம் கிழக்கு | 49(அ) வட்டம் மாலை: 5.00 மணி | Cபோர்ட்டி ஹால், எண்.48G. Aரோடு பழைய வண்ணாரபேட்டை |
| | | 51வதுவட்டம் மாலை: 6.00 மணி | விக்னேஷ் பார்ட்டி ஹால் 48/1 ராமானுஜர் தெரு, |
| 16.09.2024 திங்கள்கிழமை | பெரம்பூர் தெற்கு | 44வதுவட்டம் மாலை: 5.00 மணி | பெருந்தலைவர் காமராஜர் மண்டபம் பழனியாண்டவர் கோவில் தெரு |
| | | 36(அ)வட்டம் மாலை: 6.00 மணி | ஐஸ்வர்யா மஹால் மீனாம்பாள் சாலை, |
| 17.09.2024 செவ்வாய்க்கிழமை | ஆர்.கே.நகர் கிழக்கு | 43(அ) வட்டம் மாலை: 5.00 மணி | - பின்னர் அறிவிக்கப்படும் |
| | | 42வதுவட்டம் மாலை: 6.00 மணி | எண்.115/38, இளைய முதலி தெரு, தண்டையார்பேட்டை |
| 18.09.2024 புதன் கிழமை | பெரம்பூர் தெற்கு | 36வதுவட்டம் மாலை: 5.00 மணி | மைசூர் மஹால் E.H.ரோடு, சர்மா நகர், |
| | | 44(அ) வட்டம் மாலை: 6.00 மணி | ஈஸ்வரி திருமணமண்டபம் மேல்பட்டிபொன்னப்பன் தெரு |
| 19.09.2024 வியாழன் கிழமை | பெரம்பூர் வடக்கு | 35வதுவட்டம் மாலை: 5.00 மணி | R.R.மஹால் வடக்கு நிழற்சாலை முத்தமிழ்நகர் |
| | | 35(அ) வட்டம் மாலை: 6.00 மணி | S.S.I.திருமணமண்டபம் குமரன் தெரு, எருக்கஞ்சேரி |
| 20.09.2024 வெள்ளிக்கிழமை | இராயபுரம் கிழக்கு | 50(அ) வட்டம் மாலை: 5.00 மணி | மீனவர் ஐக்கிய சபை கூடம் காசிமேடு |
| | | 51(அ) வட்டம் மாலை: 6.00 மணி | - பின்னர் அறிவிக்கப்படும் |
| 21.09.2024 சனிக்கிழமை | ஆர்.கே.நகர் மேற்கு | 47(அ) வட்டம் மாலை: 5.00 மணி | மரியம் திருமண மாளிகை E.H.ரோடு, கொருக்குப்பேட்டை |
| | | 41வதுவட்டம் மாலை: 6.00 மணி | ஹாப்பி பார்ட்டி ஹால் வேலன் நகர் கொருக்குப்பேட்டை |
| 23.09.2024 திங்கள்கிழமை | இராயபுரம் மேற்கு | 53வதுவட்டம் மாலை: 5.00 மணி | சமுதாய நல கூடம் ஸ்டான்லி நகர், மூலக்கொத்தளம் |
| | | 48(அ) வட்டம் மாலை: 6.00 மணி | நிஜாம் பேலஸ் முத்தையா தெரு |

கூட்டம் குறித்து சம்பந்தப்பட்ட வட்ட கழக செயலாளர்கள் முறையாக அழைப்பிதழ்களை வட்டங்களில் உள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும் வழங்கி கழகத்தினர் பெருமளவில் கலந்துகொள்ள கூட்டம் ஏற்பாடு செய்திட வேண்டுகிறேன்.

**ஆர்.டி.சேகர்**, எம்.எல்.ஏ.
மாவட்ட பொறுப்பாளர் - சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.